# மெட்ரோ நிலையங்களில் கிருமி நாசினி தெளிப்பு

சென்னை, மார்ச் 13–

மெட்ரோ நிலையங்களில், 'கொரோனா' வைரஸ் பரவாமல் தடுக்க, கிருமி நாசினி தெளிக்கப்படுகிறது. பயோ மெட்ரிக் வருகைப் பதிவு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது.

மெட்ரோ பயணியருக்கு கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மெட்ரோ நிர்வாகம், 'அசென்யா' ஆராய்ச்சி மற்றும், மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து, கொரோனா வைரசை தடுப்பதற்கு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதையொட்டி, விமான நிலையம் மற்றும், சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையங்களில், கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க, கிருமி நாசினி தெளித்து, சுத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வரும், 14ல் சென்ட்ரல் மெட்ரோ நிலையம் முழுவதிலும், 15ல் தேதி, விமான நிலைய மெட்ரோ நிலையம் முழுவதிலும், இரவு, 11:00 மணிக்கு மேல், கிருமி நாசினி தெளிக்கப்பட உள்ளது.

இத்துடன், மெட்ரோ நிறுவன பணியாளர்களுக்கு, 'பயோ மெட்ரிக்' வசதியில் வருகைப் பதிவு செய்யவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, பதிவேட்டில் வருகைப் பதிவு மேற்கொள்ளப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.